— ம.செ.எண் - 76 நாள் - 28-09-2017

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

தமிழ்நாடு அரசு, முதன்மைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை சென்னை மற்றும் மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களது அறிவுரையின் படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஒருங்கிணைந்த அலுவலக வளாகம், சாந்தி நகர், திருநெல்வேலியில் 28.09.2017 வியாழன் அன்று காலை 11.00 மணி முதல் 12.00 மணிவரை நிர்வாகப் பொறியாளர்கள் திரு. G.பாலசுப்பிரமணியன், திரு. C.ரிச்சர்ட் ஸ்டான்லி மற்றும் துணை மேற்பார்வைப் பொறியாளர் திரு. S. பாலகிருஷ்ணன் ஆகியோரது முன்னிலையில் அரசு சங்கங்கள் மற்றும் அலுவலக பணியாளர்களைக் கொண்டு டெங்கு காய்ச்சல் தொடர்பான தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தேவையற்ற உபயோகப்படுத்தப்படாத பொருட்கள் (டயர், பிளாஸ்டிக் கப், தேங்காய்சிரட்டை, பிளாஸ்டிக் பாட்டில்கள், உடைந்த பானைகள் மற்றும் இதர தேவையற்ற குப்பைகள்) அப்புறப்படுத்தப்பட்டது. மேலும் கொசுப்புழு உற்பத்தி ஆகாதவண்ணம் வாரந்தோறும் வியாழனன்று இப்பணிகளை மேற்கொள்ள அலுவலக முகப்புப் பகுதியில் உறுதி மொழி எடுக்கப்பட்டது.

28/09/17

நிர்வாகப் பொறியாளர், தகுவாரியம்,
பராமரிப்பு கோட்டம், திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

Jdo tml cvr